**5.3.2015**

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### நாமகிரிப்பேட்டையில் ரூ.80 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம்

நாமகிரிப்பேட்டையில் வேளாண்மைக் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மஞ்சள் ஏலத்தில் ரூ.80 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம் போனது. நாமகிரிப்பேட்டை,வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் மஞ்சள் ஏலம் செவ்வாய்க்கிழமை தோறும் நடைபெற்று வருகிறது. ஏலத்தில், தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட, நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா, சேலம், ஆத்தூர், தலைவாசல் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள், தங்கள் நிலத்தில் விளைவித்த மஞ்சளை ஏலத்துக்கு கொண்டு வந்தனர். இதில், தலா 65 கிலோ கொண்ட 1,190 மூட்டைகள் ஏலத்துக்கு கொண்டவரப்பட்டன. அதில், விரலி ரகம் குவிண்டாலுக்கு குறைந்த பட்சம் ரூ.7 ஆயிரத்து 329-க்கும், அதிகபட்சம் ஒரு மூட்டை ரூ.10 ஆயிரத்து 404-க்கும், ஏலம் போனது. உருண்டை ரகம் குறைந்தபட்சம் 7 ஆயிரத்து 269-க்கும், அதிகபட்சம் ரூ.8 ஆயிரத்து 898-க்கும், பனங்காலி குறைந்தபட்சம் ரூ.8 ஆயிரத்து 035-க்கும், அதிகபட்சம் 17 ஆயிரத்து 189-க்கும் ஏலம் போனது.

### கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இடியுடன் மழை

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பரவலாக செவ்வாய்க்கிழமை இரவு இடியுடன் மழை பெய்ததால், மா விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக கோடையை மிஞ்சும் வகையில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்து வந்தது. இந்த

நிலையில், கடந்த சில நாள்களாக மாலையில் குளிர்ந்த காற்று வீசியது. தொடர்ந்து, செவ்வாய்க்கிழமை இரவு கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பரவலாக இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. இதனால், ஒரு மணி நேரம் மின் தடை ஏற்பட்டது. நகர காவல் நிலையத்தில் தகவல் தொடர்பு சாதனங்கள் சேதமடைந்தன. கிருஷ்ணகிரி மாவட்டத்தில் புதன்கிழமை காலை 8 மணி அளவில் பதிவான மழையளவு: (மி.மீட்டரில்): கிருஷ்ணகிரி 35.2, நெடுங்கல் 17.2, அஞ்செட்டி 23, பாரூர் 19.6, போச்சம்பள்ளி 9.6, தேன்கனிக்கோட்டை 2, ராயக்கோட்டை 3 மழை பதிவாகி உள்ளன. மா விவசாயிகள் மகிழ்ச்சி: கிருஷ்ணகிரி மாவட்டத்தில் கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டணம், பர்கூர், வேப்பனஅள்ளி, போச்சம்பள்ளி, மத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் மா அதிகளவு சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நிகழாண்டில் போச்சம்பள்ளி, சந்தூர், மத்தூர், சுற்றுப் பகுதிகளில் சாகுபடி செய்துள்ள மா மரங்களில் 65 சத பூக்கள் பூத்துள்ளன. பிப்ரவரி மாத இறுதியில் இந்தப் பூக்கள் பிஞ்சு பிடிக்கும் பருவத்துக்கு வரும். இந்தப் பருவத்தில் மழை பெய்தால் காய்கள் திரட்சியாவதுடன், உற்பத்தியும் அதிகரிக்கும். இதனால், மா விவசாயிகள் மழையை எதிர்பார்த்து காத்திருந்தனர். கடும் வெயிலால் விவசாயிகள் சிலர் தண்ணீரை விலைக்கு வாங்கி மா மரங்களுக்கு பாய்ச்சி வந்தனர். இந்த நிலையில், செவ்வாய்க்கிழமை இரவு பெய்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## <u>48 விவசாயிகளுக்கு நடவு துவரை இடுபொருட்கள்</u>

அரியலூர் மாவட்டம், தா.பழூரில் நடவு துவரை சாகுபடி செய்த விவசாயிகள் 48 பேருக்கு வேளாண்மைத் துறை சார்பில், ஒன்றியக் குழுத் தலைவர் ஜெயசுதா இடுபொருட்களை செவ்வாய்க்கிழமை வழங்கினார்.

தா.பழூர் வட்டாரத்தில் அட்மா திட்டத்தின் கீழ் 2014-15 ஆம் நிதியாண்டில், தமிழக முதல்வரால், சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ்

அறிவிக்கப்பட்ட நடவு துவரை செயல்விளக்கம் அமைத்த விவசாயிகள் 48 பேருக்கு இடுபொருட்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சிக்கு தா.பழூர் ஒன்றியக் குழுத் தலைவரும், அட்மா திட்ட விவசாயிகள் ஆலோசனைக் குழுத் தலைவருமான ஜெயசுதா சிவசுப்பிரமணியன் தலைமை வகித்து விவசாயிகளுக்கு இடுபொருட்களை வழங்கிப் பேசியது: நடவு துவரை சாகுபடி தொழில்நுட்பம் மட்டுமின்றி, அனைத்து வகை பயிர்களுக்கும் புதிய தொழில்நுட்பங்களை பயன்படுத்தி விவசாயிகள் அனைவரும் அதிக மகசூலை பெற்று மும்மடங்கு வருமானம் பெற வேண்டும் என்றார். வேளாண்மை உதவி இயக்குநர் பழனிச்சாமி பேசும்போது, தமிழ்நாட்டில் துவரை பயிர் முக்கியமான பயறுவகை பயிராகும். தட்பவெப்பம், புதிய தொழில்நுட்பங்களை கடைபிடிக்காமை, நோய் மற்றும் பூச்சிகளின் தாக்கம், பயிர் எண்ணிக்கை குறைதல் போன்ற பல காரணிகளால் மகசூல் பாதிக்கப்படுகிறது. இதைத் தவிர்க்கவும், துவரையில் மகசூலை அதிகப்படுத்தவும் பூக்கும் பருவத்தில் 2% டிஏபி கரைசலை தெளிக்க வேண்டும். பூச்சிநோய் தாக்குதலைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை மேற்கொள்வதன் மூலம் அதிக மகசூலை பெறலாம் என்றார் அவர். அட்மா திட்ட விவசாயிகள் ஆலோசனைக் குழு உறுப்பினரும், மாவட்ட ஊராட்சி உறுப்பினருமான வாசுகி ராஜேந்திரன் முன்னிலை வகித்தார். அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சகாதேவன் வரவேற்றார். உதவித் தொழில்நுட்ப மேலாளர் உமா ஏற்பாடுகளை செய்திருந்தார். வேளாண்மை அலுவலர் சுகந்தி, துணை வேளாண்மை அலுவலர் ரவிச்சந்திரன், உதவி வேளாண் அலுவலர் ராஜா, ஜோதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## 272 குவிண்டால் பருத்தி ரூ. 10 லட்சத்துக்கு விற்பனை

பெரம்பலூர் அருகே எளம்பலூரில் உள்ள ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஏலத்தில் 272 குவிண்டால் பருத்தி ரூ. 10 லட்சத்துக்கு விற்பனையானது. இந்திய பருத்தி கழகத்தின்

மூலம் நடைபெற்ற மறைமுக ஏலத்தில் 61 விவசாயிகள் 272 குவிண்டால் எடைகொண்ட 717 மூட்டை பருத்தியை விற்பனைக்காக கொண்டு வந்தனர். பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்திருந்த வியாபாரிகள் பருத்தியின் தரத்தை சோதித்து, அதற்கான விலையை அலுவலர்களிடம் அளித்தனர். அதிக விலை நிர்ணயித்து கேட்ட வியாபாரிக்கு, விவசாயி களின் அனுமதியுடன் பருத்தி விற்பனை செய்யப்பட்டது. இதில், நீண்ட இழை பருத்தி குவிண்டால் ஒன்று ரூ. 3,500 முதல் ரூ. 4,230 வரை, மிக நீண்ட இழை பருத்தி குவிண்டால் ஒன்று ரூ. 3,810 முதல் ரூ. 4,210 வரை என, 272 குவிண்டால் பருத்தி ரூ. 10 லட்சத்துக்கு விற்பனையானது. 12 சத ஈரப்பதத்துக்கு மேல் உள்ள பருத்தியை கொள்முதல் செய்ய வாய்ப்பில்லாததால், பருத்தி விவசாயிகள் நன்கு வெடித்த பருத்தியை அறுவடை செய்து நிழலில் உலரவைத்து 8 சத ஈரப்பதத்துடன் தூசி யில்லாமல் சுத்தப்படுத்தி கொண்டுவரும்பட்சத்தில் விவசாயிகளுக்கு உரிய விலை கிடைக்கும். பருத்தி கொள்முதல் செய்யப்பட்டதிலிருந்து 8 நாள்களுக்குள் இந்திய பருத்தி கழகம் காசோலையாக பணம் பட்டுவாடா செய்யும் என வேளாண் துறையினர் தெரிவித்துள்ளனர்.
போளூரில் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

**போளூர் வட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம் வட்டாட்சியர்** அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்துக்கு மாவட்ட விநியோக அலுவலர் எழிலன் தலைமை வகித்தார். இதில் வட்டாட்சியர் கோபு,விவசாயப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். கூட்டத்தில், பெரியகரம் ஊராட்சியில் உள்ள நடுநிலைப்பள்ளி உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது. இந்தப் பள்ளிக்கு இடம் ஒதுக்கீடு செய்ய வேண்டும். மாம்பட்டு ஊராட்சியில் ஆக்கிரமிப்புகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்,மடவிளாகம் ஊராட்சியில் அங்கன்வாடி மையம் அமைக்கப்பட்டு இதுவரை திறக்கப்படவில்லை. அதனை திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கஸ்தம்பாடி ஏரிக்கரை

ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும்,பெரணம்பாக்கம் ஊராட்சியில் வனத்துறை பகுதிக்கு அருகே உள்ள விவசாய நிலத்தை காட்டுப் பன்றிகள் நாசம் செய்கின்றன. எனவே அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும்,டன்னுக்கு அரசு அறிவித்த ரூ.2650ஐ வழங்காத சர்க்கரை ஆலையை அரசுடைமையாக்கவேண்டும் ,திருவண்ணாமலை மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அரசு அறிவிக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர்.

## குன்னூரில் தேயிலை தயாரிப்புப் பயிற்சி

நீலகிரி மாவட்டத்தில் உள்ள சிறு, குறு தேயிலை விவசாயிகள் தரமான தேயிலைகளை தயாரிப்பது குறித்த ஒருநாள் பயிற்சி முகாம் குன்னூரில் புதன்கிழமை நடைபெற்றது. நீலகிரி மாவட்டத்தில் விளையும் பச்சைத் தேயிலைக்கு உரிய விலை கிடைக்காமல் கடந்த பல ஆண்டுகளாக தேயிலை விவசாயிகள் மிகுந்த சிரமத்திற்குள்ளாகி வருகின்றனர். இதைக் கருத்தில் கொண்டு நடைபெற்ற கருத்தரங்கில், பங்கேற்ற தென்னிந்திய தேயிலை வாரிய செயல் இயக்குநர் அம்பலவாணன் பேசியது: சிறந்த தேயிலைகளுக்கு நல்ல சந்தை நிலவரம் இருப்பதாலும், கிரீன் டீ, சில்வர் டிப் டீ, கைகளால் உற்பத்தி செய்யப்படும் தேயிலைகளுக்கு சர்வதேச அளவில் நல்ல வரவேற்பு இருப்பதாலும் இந்த வகையான தேயிலைகளை உற்பத்தி செய்வதில் விவாயிகள் அதிக ஆர்வம் காட்ட வேண்டும் என்றார். இதில், உபாசியின் ஒருங்கிணைப்பாளர் ஜி.ராமமூர்த்தி, தேயிலை தொழிற்சாலை இயக்குநர்கள் ரமேஷ் பாபு, சுமதி, பிரபு நஞ்ஜன், துணை இயக்குநர் ஜார்ஜ் சாமுவேல் தேயிலைவாரிய அதிகாரிகள் ஆனந்தகுமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**<u>விவசாயிகளின் மேம்பாட்டுக்கு வங்கிகள் ஒத்துழைக்க வேண்டும்:</u>**

**<u>கூடுதல் தலைமைச் செயலாளர் லதா கிருஷ்ணராவ்</u>**

கர்நாடகத்தில் விவசாயிகளின் மேம்பாட்டுக்கு வங்கிகள் ஒத்துழைக்க வேண்டும் என்று, அந்த மாநில கூடுதல் தலைமைச் செயலாளர் லதா கிருஷ்ணராவ் கேட்டுக் கொண்டார். பெங்களூரு விதான செப்தாவில் செவ்வாய்க்கிழமை வங்கிகளின் கூட்டமைப்பு சார்பில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் அவர் பேசியது: விவசாயிகளின் நலனுக்காக அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அரசின் திட்டங்கள் விவசாயிகளைச் சென்றடைய வங்கிகள் ஒத்துழைக்க வேண்டும். விவசாயிகளுக்கு அரசு அளிக்கும் மானியங்களை ஒருபோதும் கடனாக அளிக்கக் கூடாது. விவசாயிகளுக்கு அதிக அளவு விவசாயக் கடன்களை வழங்க வங்கிகள் முன்வர வேண்டும். கடன் வழங்க அதிக கட்டுப்பாடுகளை விதிக்கக் கூடாது. கட்டுப்பாடுகளில் தளர்வு ஏற்படுத்தி, பெரும்பாலான விவசாயிகளுக்கு கடன் வழங்க வங்கிகள் முன்வர வேண்டும் என்றார். வங்கிகளின் ஒருங்கிணைப்பாளரும், சிண்டிகேட் வங்கியின் செயல் தலைவருமான ஸ்ரீவத்சவா பேசியது: பிரதமரின் ஜன்தன் திட்டத்தில் கர்நாடகம் தன்னிறைவு பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் கர்நாடகம் 98.37 சதம் சாதனை செய்துள்ளது. இதில் 63.24 லட்சம் பேர் பயனடைந்துள்ளனர். மாநிலத்தில் 2014-ஆம் ஆண்டில் ரூ. 89 ஆயிரத்து 821 கோடி கடன் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. டிசம்பர் மாத இறுதி வரை ரூ. 78 ஆயிரத்து 298 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. விவசாயம், தொழில்சாலைகள் உள்ளிட்ட முக்கிய துறைகளுக்குத் தேவையான அளவு கடன் வழங்கப்பட்டுள்ளது என்றார்.

<u>பால் உற்பத்தியைப் பெருக்கும் பசுந்தீவனச் சோளம் !</u>



நல்ல சத்துள்ள, தரமான பசுந்தீவனங்கள் போதிய அளவிலும், சரி விகிதத்திலும் கிடைக்காததே கால்நடைகளின் பால் உற்பத்தித் திறன் குறைவதற்கு முக்கியக் காரணமாகும். இதனைக் கருத்தில் கொண்டு தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் பசுந்தீவனச் சோளம் (கோ.எப்.எஸ். - 31) பயிரிட்டு கால்நடைகளுக்கு வழங்குவதன் மூலம் பால் உற்பத்தியைப் பெருக்க முடியும் என்கிறது. இதன் உற்பத்தி முறை குறித்து காட்டுப்பாக்கம் வேளாண் அறிவியல் நிலைய உதவிப் பேராசிரியர் (உழவியல்) பெ. முருகன் கூறியது: பசுந்தீவனச் சோளம் கோ.எப்.எஸ். - 31 ரகத்தின் சிறப்பியல்புகள்: அதிக கிளைக்கும் திறன் கொண்டது. அகலமான இலைகள், கதிர்களில் இருந்து மணிகள் கொட்டாமல் இருக்கும் தன்மை கொண்டது. அதிக புரதச்சத்து (9.86 சதவீதம்) கொண்டதும், அதிக பசுந்தீவன உற்பத்தி கொண்டதுமாகும். அதாவது 1 ஹெக்டேருக்கு 1 ஆண்டில் 190 டன் என்ற அளவில் அறுவடை செய்யலாம். மறுதாம்பு பயிருக்கு ஏற்றது. சுவையான பசுந்தீவனமாகும். கால்நடைகள் இவற்றை விரும்பி உண்கின்றன.

**சாகுபடி தொழில்நுட்பம்:** இந்த பசுந்தீவனப் பயிரை ஆண்டு முழுவதும் எல்லா மண் வகைகளிலும் பயிரிடலாம். நிலத்தை இரும்புக் கலப்பைக் கொண்டு 2 முறை நன்கு உழவு செய்ய வேண்டும். பிறகு 1 ஏக்கருக்கு 10 டன் என்ற அளவில் மக்கிய தொழு உரம், 10 பாக்கெட் அசோஸ் பைரில்லம், 10 பாக்கெட் பால்போ பாக்டீரியா கலந்து இட வேண்டும். பின்னர், 2 முதல் 3 முறை உழுது பண்படுத்தப்பட்ட நிலத்தில் 6 மீட்டர் நீளமும், 60 செ.மீ. இடைவெளியும் கொண்ட பாத்திகள் அமைக்க

வேண்டும். மண் பரிசோதனையின் அடிப்படையில் உரங்கள் இட வேண்டும். மண் பரிசோதனை செய்யாவிடில் ஒரு ஏக்கருக்கு அடியுரமாக 12 கிலோ தழைச்சத்து, 16 கிலோ மணிச்சத்து, 8 கிலோ சாம்பல் சத்து இட வேண்டும். மேலுரமாக விதைத்த 25 நாள்கள் கழித்து 12 கிலோ தழைச்சத்து போட வேண்டும். மறுதாம்புப் பயிரில் ஒவ்வொரு அறுவடைக்குப் பின்பும் 18 கிலோ தழைச்சத்து இடவேண்டும். 4-ஆவது அறுவடையின் போது ஏக்கருக்கு 18 கிலோ தழைச்சத்துடன் 16 கிலோ மணிச்சத்து, 16 கிலோ சாம்பல் சத்தையும் இடுவது நல்லது. ஒரு ஏக்கருக்கு 2 கிலோ விதை போதுமானது. வரிசைக்கு வரிசை 30 செ.மீ. இடைவெளியில் விதைகளை பாத்திகளின் இருபுறமும் விதைக்க வேண்டும். விதைக்கு விதை இடைவெளி 10 முதல் 15 செ.மீ. இருக்க வேண்டும். விதைத்த 20 நாள்கள் கழித்து களை எடுக்க வேண்டும். தேவைப்பட்டால், 35 முதல் 40-ஆவது நாளில் அடுத்த களை எடுக்கலாம்.

**நீர் மேலாண்மை:** நீர் மேலாண்மையைப் பொருத்தவரை விதைத்தவுடன் ஒரு நீர்ப் பாசனம் செய்ய வேண்டும். 3-ஆவது நாளில் உயர் நீர்ப் பாசனம் செய்ய வேண்டும். பிறகு 10 நாள்களுக்கு ஒரு முறை நீர்ப் பாசனம்செய்யவேண்டும்.

**பயிர் பாதுகாப்பு**: பொதுவாக பயிர் பாதுகாப்பு தேவையில்லை. விதை உற்பத்திக்காக பயிர் செய்தால், குருத்து ஈ காணப்பட்டால் விதைத்த 10-ஆவது நாளில் புரபனோபாஸ் 300 மில்லி மருந்தை 200 லிட்டர் நீரில் கலந்து தெளிக்க வேண்டும். பசுந்தீவன அறுவடைக்கு 30 நாள்களுக்கு முன் பயிர் பாதுகாப்பு மருந்துகள் தெளிப்பதை நிறுத்தி விட வேண்டும்.

**அறுவடை:** விதைத்த 65 முதல் 70 நாள்களில் அறுவடை செய்து விடலாம். பிறகு ஒவ்வொரு மறுதாம்பு பயிரும் 50 நாள்கள் இடைவெளிகளில் அறுவடை செய்யலாம். கோ.எப்.எஸ். - 31 ரகம் 1 ஏக்கரில் 68 டன்கள் பசுந்தீவனம் முதல் 7 அறுவடைகளில் கிடைக்கும். பூக்கும் பருவத்துக்கு முன் கால்நடைகளுக்கு வழங்க வேண்டாம்:

பசுந்தீவனச் சோளம் கோ.எப்.எஸ். - 31 ரக பயிர் விளைந்த 40 நாள்களுக்குள்பட்ட இளம் பயிர் பருவத்தில் கால்நடைகளுக்கு வழங்கக் கூடாது. அந்த பருவத்தில் ஹைட்ரஜன் சயனைடு என்ற நச்சுப் பொருள் அதிகம் இருப்பதால் அது கால்நடைகளுக்கு ஏற்றதல்ல. எனவே பயிர்கள் பூத்தப் பின் அறுவடை செய்து கால்நடைகளுக்கு கொடுக்க வேண்டும்.

**விதை உற்பத்தி:** இந்த தீவன சோளத்தை விதை உற்பத்தி செய்தால் அதிக லாபம் ஈட்டலாம். விதை உற்பத்தி செய்வதாக இருந்தால் பயிர் இடைவெளியை மட்டும் அதிகரித்து 60-க்கு 15 செ.மீ. அளவில் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். மற்ற தொழில்நுட்பங்களை சாகுபடி குறிப்பில் உள்ளதுபோல கடைப்பிடிக்கலாம். பயிர்கள் 110 முதல் 125 நாள்களில் விதை அறுவடை செய்யலாம். 1 ஏக்கருக்கு 300 கிலோ வீதம் விதை மகசூல் தரும். ஆண்டுக்கு 3 முறை விதை அறுவடை செய்யலாம். அறுவடை செய்த விதைகளை 60 நாள்களுக்குப் பிறகு விதைப்புக்கு உபயோகிப்பது நல்லது. மேலும் விவரங்களுக்கு காட்டுப்பாக்கம் வேளாண் அறிவியல் நிலையத்தை 044 - 2745 2371 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம் என்றார் உதவிப் பேராசிரியர் பெ. முருகன்.

## <u>மண்ணைப் பொன்னாக்கும் தென்னை நார்க் கழிவு உரம்</u>



அதிக சத்துகளுடன் கூடிய தென்னை நார்க் கழிவு உரம் மண்ணைப் பொன்னாக்கும் வரமாக விவசாயிகளுக்கு கிடைத்துள்ளது என வேளாண் துறையினர் தெரிவித்தனர். தென்னை நார்க் கழிவில் எளிதில் சிதைவடையாத லிக்னின், செல்லுலோஸ், கரிமம் ஆகியவை உள்ளன. தென்னை நார்க் கழிவு நிலத்தில் மக்கும்போது தழைச்சத்தின் அளவு குறைகிறது. ஆய்வுகளின் முடிவில் வீணடிக்கப்படும் தென்னைக் நார்க்

கழிவை உயிரியல் முறையில் புளுரோட்டஸ் என்னும் காளான் வித்தைப் பயன்படுத்தி மக்க வைத்து ஊட்டமிகு எருவாக்குவதால் அதன் பயிர்ச் சத்து அளவு அதிகரிக்கப்படுகிறது.

**தென்னை நார்க் கழிவை மக்க வைக்கும் முறை:** தேவையான பொருள்கள்: தென்னை நார்க் கழிவு 1 டன். புளுரோட்டஸ் வித்து 5 பாட்டில்கள், யூரியா 5 கிலோ. செயல்முறைகள்: (முதல் அடுக்கு) நிழலடியில் 5க்கு 3 சதுர மீட்டர் சமதள பரப்பில் 100 கிலோ கழிவுகளை சீராகப் பரப்பி, நன்கு நீர்த் தெளிக்க வேண்டும். பின்னர் அதன் மீது ஒரு பாட்டில் புளுரோட்டஸ் வித்தை சீராக தூவவும். (இரண்டாவது அடுக்கு) அதன் மீது மீண்டும் 100 கிலோ கழிவை சமமாக பரப்பி நன்றாக நீர்த் தெளித்து ஒரு கிலோ யூரியாவை சீராகத் தூவ வேண்டும். இவ்வாறு இரண்டு அடுக்குகளை மாற்றி மாற்றி ஒரு மீட்டர் உயரத்துக்கு சீராக அடுக்க வேண்டும். அதை கணிசமான ஈரத்துடன் சேர்த்து மக்க வைக்க வேண்டும். சுமார் 30 முதல் 45 நாள்கள் வரை மக்க வைத்தால் நல்ல உரமாகமாறிவிடும்.

**தென்னை நார்க் கழிவு பயன்கள்:** ஒரு ஏக்கருக்கு 5 டன் தென்னை நார்க் கழிவை இடுவதால் கீழ்கண்ட நன்மைகள் கிடைக்கின்றன. களிப் பாங்கான மண்ணின் இறுக்கத் தன்மையைக் குறைத்து நீர் கடத்தும் திறனை அதிகரிக்கிறது. மணற்பாங்கான மண்ணிலும், மானாவரி நிலங்களிலும் நீர்ப்பிடிப்புத் திறனை மேம்படுத்தி மண்ணின் வளத்தை பெருக்குகிறது. களர் நிலங்களிலும் தோல் தொழிற்சாலைக் கழிவினால் பாதித்த நிலங்களிலும் உள்ள தீங்கை நீக்கி விளைச்சலை அதிகரிக்கிறது. ஊட்டச் சத்துக்கள் மிக்க இந்த எரு அனைத்து வகை நிலங்களிலும் மண்ணை வளமாக்கி விளைச்சலைக் கூட்ட வல்லது. கழிவுப் பொருள்களை மக்கச் செய்து எருவாக்குவதால் சுற்றுப்புறச் சூழல் பாதுகாக்கப்படுகிறது. எனவே விவசாயிகள் மேற்கண்ட முறையில் தென்னை நார்க் கழிவு உரத்தை தயாரித்து தங்களது மண்ணைப் பொன்னாக்கலாம் என வேளாண் துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### சொட்டு நீர்ப்பாசனத்திற்கு பதிவு: கால அவகாசம் நீட்டிப்பு

திருவள்ளூர்: சொட்டு நீர்ப்பாசனம் அமைப்பதற்காக, விவசாயிகள் இணையதளம் மூலம் பதிவு செய்வதற்கான கால அவகாசம், வரும் 24ம் தேதி வரை நீட்டிப்பு செய்யப்பட்டு உள்ளது.

இணையதளம்

திருவள்ளூர் மாவட்டத்தில், பண்ணை நீர் மேலாண்மை திட்டம் மற்றும் தேசிய நீடித்த நிலையான வேளாண்மை இயக்கத்தின் கீழ், சொட்டு நீர்ப்பாசனம் அமைப்பதற்காக, விவசாயிகள் இணையதளம் மூலம் பதிவு செய்து கொள்ளலாம். இதற்கான கால அவகாசம், வரும் 24ம் தேதி வரை நீட்டிப்பு செய்யப்பட்டு உள்ளது. குடும்ப அட்டை நகல் எனவே, அனைத்து விவசாயிகள் கணினி சிட்டா, அடங்கல், நில வரைபடம், பாஸ்போர்ட் அளவு புகைப்படம், குடும்ப அட்டை நகல், சம்பந்தப்பட்ட தாசில்தாரிடம் பெறப்பட்ட சிறு, குறு விவசாயி சான்றிதழ், மின் இணைப்பு அட்டை நகல் ஆகிய ஆவணங்களுடன், தங்களது வட்டார வேளாண்மை மற்றும் தோட்டக்கலை உதவி இயக்குனர்களை அணுகி பயன் பெறலாம். அதிகபட்சமாக, 12 ஏக்கர் பரப்பிற்கு சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க சிறு, குறு விவசாயிகளுக்கு, 100 சதவீதமும், இதர விவசாயிகளுக்கு, 75 சதவீதமும் மானியம் வழங்கப்படுகிறது. தகுதி உள்ள விவசாயிகள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி கொள்ளுமாறு, ஆட்சியர் வீர ராகவ ராவ் கேட்டுக் கொண்டுள்ளார்.

## கோடை மழைக்கு வெள்ளோட்டம்

ஆர்.கே.பேட்டை: பருவத்தில் பொழிய தவறிய மழை, கோடையில் வெளுத்துக்கட்ட, சில நாட்களாக வெள்ளோட்டம் பார்த்து வருகிறது.

ஆர்.கே.பேட்டை பகுதியில், 10 நாட்களாக கோடையில் தாக்கம் அதிகரித்து வந்தது. நேற்று முன்தினம் முதல், வானம் அவ்வப்போது மழை பொழிவது போல திரண்டு வருகிறது. நேற்று முன்தினம் காலை மற்றும் மாலையில் லேசான துாரலுடன் மேகம் பின்வாங்கியது. நேற்று, காலை 7:30 மணியளவில், மீண்டும் துாரல் போட்டது. மாலையும் மேகம் திரண்டது. பலத்த மழை பொழியாவிட்டாலும், வெயில் தாக்கம் குறைந்து குளிர்ந்த காற்று வீசியதால், பகுதிவாசிகள் ஆறுதல் அடைந்துள்ளனர். அடுத்த சில நாட்களில் மேகத்தின் தயக்கம் மறைந்து, கன மழை பொழியும் என்று எதிர்பார்த்துள்ளனர். விவசாயிகளும், தண்ணீர் இன்றி கருகி வரும் பயிரை காப்பாற்றி விடலாம் என்ற நம்பிக்கையில் உள்ளனர்.

## கவுந்தப்பாடி ஒழுங்கு முறை விற்பனை கூடம்

கோபி:கவுந்தப்பாடி ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை சார்பில், விஞ்ஞான முறைப்படி, தானியங்கள் சேமிப்பு குறித்த விழிப்புணர்வு பயிற்சி நேற்று நடந்தது. ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் வாணி வரவேற்றார். வேளாண் விற்பனை துணை உதவி இயக்குனர் சாத்தப்பன் தலைமை வகித்து பேசியதாவது:விவசாயிகள் விளைபொருட்களை சந்தைப்படுத்துதல், தரம் பிரித்தல், சிப்பம் கட்டுதல், சேமித்தல், பாதுகாத்தல், சந்தை சார்ந்த சாகுபடி திட்டம் பற்றியும், கூடுதல் விலை பெறவும், தொழில் நுட்பங்களை கடைபிடிக்க வேண்டும். தேசிய உணவு பதப்படுத்துதல் இயக்கம், உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் அமைத்தல்,

விவசாயிகள் குழு அமைத்தல், சந்தை இணைப்பு ஆகியவை அவசியமாகும்.உணவுப்பொருட்களில் கலப்படம் பற்றிய விழிப்புணர்வு, உற்பத்தியாளரான விவசாயிகளுக்கும், நுகர்வோரான பொதுமக்களுக்கு அவசிய தேவை. விவசாய விளை பொருட்களில் கலப்படத்தை தடுக்க, 351 வேளாண் விளை பொருட்களுக்கு, அக்மார்க் தரச்சான்று வழங்கப் பட்டுள்ளது. ஈரோடு மாவட்டத்தில், அக்மார்க் பரிசோதனை நிலையம், சித்தோட்டில் செயல்பட்டு வருகிறது. கடலை, கோதுமை ஆகியவற்றை அரைத்தவுடன் ஒரு மாதத்துக்குள் பயன்படுத்த வேண்டும். ரவை மைதா நீக்காத கோதுமையை நேரடியாக அரைக்கலாம். முழுமையான கோதுமை மாவுக்கு மட்டுமே அக்மார்க் முத்திரை இடப்படுகிறது. அக்மார்க் முத்திரை இடுவதால் சுத்தமான, கலப்படமில்லாத, சரியான எடையுடன் பொருட்கள் கிடைப்பதால், உடலுக்கு தீமை ஏற்படாமல் ஆரோக்கியமாக வாழலாம். காலாவதியான பொருட்களை கண்டிப்பாக பயன்படுத்த கூடாது. விவசாய விளை பொருட்களை தரம்பிரித்து விற்கும்போது, விவசாயிகளுக்கு கூடுதலான வருமானம் கிடைக்கும், என்றார். வேளாண் அலுவலர் சண்முகசுந்தரம், தோட்டக்கலை உதவி இயக்குனர் நாச்சிமுத்து, உதவி வேளாண் அலுவலர் கண்ணன், மாவட்ட செயலாளர் செங்கோட்டையன், மாவட்ட உழவர் விவாத குழு செயலாளர் வெங்கடாசலபதி உட்பட பலர் பங்கேற்றனர்.உதவி வேளாண் அலுவலர் செல்வன் நன்றி கூறினார்.

## குமரியில் ஆலங்கட்டி மழை

நாகர்கோவில் : குமரி மாவட்டத்தில் நேற்று பல இடங்களிலும் ஆலங்கட்டி மழை பெய்தது. பரவலான மழையால் வெப்பம் ஓரளவு தணிந்துள்ளது. மாவட்டத்தின் பல பகுதிகளிலும் நேற்று மதியத்துக்கு பின்னர் மழை பெய்தது. திருவட்டார், குலசேகரம் பகுதிகளில் சிறிய பனிக்கட்டிகள் விழுவது போல ஆலங்கட்டி மழை பெய்தது. திடீர் என்று பெய்த மழை கல் போன்று விழுந்ததால் ரோட்டில் நடந்து சென்ற மக்கள்

ஓட்டம் பிடித்தனர். இதுபோல தக்கலை, இரணியல், அழகியமண்டபம் பகுதிகளில் நேற்று மாலையில் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. நாகர்கோவில் அருகே இடலாக்குடியில் மின்னல் காரணமாக ஒரு தென்னை மரம் தீ பிடித்து எரிந்தது. நாகர்கோவில் தீயணைப்புத் துறையினர் தீயை அணைத்தனர். கடந்த சில நாட்களாக விட்டு விட்டு பெய்து வரும் மழையால் அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்து வெப்பம் ஒரளவு தணிந்துள்ளது.

**<u>சக்கரைவள்ளி கிழங்குகள் அறுவடை மும்முரம்</u>**

குளித்தலை:குளித்தலை அருகே, தோகைமலை பகுதியில் சாகுபடி செய்யப்பட்ட சக்கரைவள்ளி கிழங்குகள் அறுவடை செய்து வருகின்றனர். கரூர் மாவட்டம், குளித்தலை மற்றும் தோகைமலை பகுதியில், பருவமழை குறைந்ததால், கிணற்று பாசனம் செய்த விவசாயிகள் நெல் சாகுபடியை குறைத்து பெருமளவில் சக்கரைவள்ளி கிழங்கை சாகுபடி செய்தனர். பருவமழை போதிய அளவு பெய்யாததால், நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்து, தோகைமலை பகுதியில் நூற்றுக்கனக்கான விவசாய கிணறுகள் வறண்டு போனது. இந்நிலையில் ஆழ்குழாய் கிணறுகள் மூலம் விவசாயம் செய்பவர்கள், தண்ணீர் சிக்கனம் கருதி, நான்கு மாதங்களில் மகசூல் தரக்கூடிய சக்கரைவள்ளி கிழங்கை சாகுபடி செய்தனர்.கிழங்குகள் விளைச்சல் கண்டுள்ளதால், தற்போது அறுவடை செய்து, பல்வேறு இடங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பி வருகின்றனர்.ஒட்டண்சத்திரம், திருச்சி போன்ற சந்தைகளில், ஒரு கிலோ சிகப்பு சக்கரைவள்ளி கிழங்கு, ஆறு ரூபாய்க்கும், வெள்ளை ரக சக்கரைவள்ளி கிழங்கு, ஐந்து ரூபாய்க்கும் விற்பனை செய்யப் படுகிறது. சந்தைகளுக்கு நேரடியாக கிழங்குகளை கொண்டு செல்ல அதிகம் செலவாகும் என்பதால், இடைத்தரகர்கள் மூலம் கிழங்குகளை விற்பனை செய்து வருகின்றனர். இடைத்தரகர்கள் கமிஷன் போக, ஒரு கிலோ, நான்கு ரூபாய் வரை மட்டுமே கிழங்குகள் விற்பனையாகிறது. இதனால், சக்கரை வள்ளி கிழங்கு சாகுபடி செய்த தோகைமலை பகுதி

விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். பல இடங்களில், சாகுபடி செய்த விவசாயிகள், கிழங்கை பறிக்காமல் தாமதப்படுத்தியும் வருகின்றனர்.

## ஒருவந்தூர் கூட்டுறவு சங்கத்தில் 1,500வாழைத்தார் ரூ.2.15 லட்சத்துக்கு ஏலம்

மோகனூர்:ஒருவந்தூர் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில், நேற்று நடந்த ஏலத்தில், 1,500 வாழைத்தார், 2.15 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. மோகனூர் அடுத்த, ஒருவந்தூர் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்க வளாகத்தில் வாரந்தோறும், புதன்கிழமை வாழைத்தார் ஏலம் விடப்படுகிறது. இப்பகுதியில், ஒருவந்தூர், ஒருவந்தூர்புதூர், கணபதி பாளையம், சங்கரம்பாளையம், வடுகப்பட்டி, பொய்யேரி போன்ற பகுதிகளில், நூற்றுக்கணக்கான ஏக்கரில் வாழை சாகுபடி செய்யப் பட்டுள்ளது. இங்கு, பூவன், ரஸ்தாளி, கற்பூரவள்ளி, மொந்தன், பச்சநாடன், ஏலஅரிசி போன்ற ரகங்கள் சாகுபடி செய்யப்படுகிறது. நன்கு முதிர்ந்த காய்களை அறுவடை செய்து, சங்கத்தில் நடக்கும் ஏலத்துக்கு கொண்டு வருகின்றனர். அவ்வாறு கொண்டுவரப்படும் வாழைத் தார்களை, பல்வேறு பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் போட்டி போட்டு ஏலம் எடுத்து, வெளிமாவட்டங்களுக்கு விற்பனை செய்கின்றனர்.நேற்று நடந்த ஏலம், ஒருவந்தூர் பஞ்சாயத்து தலைவர் செல்லராஜாமணி, பி.ஏ.சி.பி., தலைவர் பாலசுப்ரமணியம் ஆகியோர் முன்னிலையில் நடந்தது. அதில், மொத்தம், 1,500 வாழைத்தார்கள் கொண்டு வரப்பட்டது. அதிக பட்சமாக ஒரு வாழைத்தார், 400 ரூபாய்க்கும், குறைந்த பட்சமாக, 50 ரூபாய்க்கும் ஏலம் போனது.மொத்த வாழைத்தார்களும், 2.15 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது. விற்பனை முடிந்ததும், விவசாயிகளுக்கு உரிய தொகை உடனடியாக பட்டுவாடா செய்யப்பட்டது.

## கால்நடைக்கு உணவுதயாரிப்பு மையம் திறப்பு

நாமக்கல்:நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின், கால்நடை உற்பத்தி பொருட்கள் தொழில்நுட்ப துறையின் சார்பில், செல்ல பிராணிக்கான உணவு தயாரிப்பு மையம் திறக்கப் பட்டது. இந்திய வேளாண் ஆராய்ச்சி கழக செயலாக்க கல்வி வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 80.25 லட்சம் ரூபாய் மதிப்பில், நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின், கால்நடை உற்பத்தி பொருட்கள் தொழில்நுட்ப துறையின் சார்பில், செல்ல பிராணிகளுக்கான உணவு தயாரிப்பு மையம் கட்டப்பட்டது. அதற்கான, கட்டிட மற்றும் உணவு தயாரிப்பு மையத்தை, பல்கலை துணை வேந்தர் திலகர் திறந்து வைத்தார். இந்த இயந்திரத்தின் மூலமாக, முட்டையிட்டு கழித்த கோழிகள், இறைச்சி எலும்பு ஆகியவற்றை கொண்டு, செல்ல பிராணிக்கான உணவு தயாரிக்க முடியும். மாணவர்களுக்கான பயிற்சி மற்றும் வர்த்தக ரீதியாகவும் பயன்படுத்த முடியும். மேலும், இந்த உணவு தயாரிப்பு மையத்தில், தொழில் முனைவோர், விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கி, விற்பனைக்கும் வழங்கப்படும்.நாமக்கல் பல்கலை முதல்வர் துரைசாமி, துறை தலைவர்கள், பேராசிரியர்கள், தொழில்முனைவோர், விவசாயிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

## பரணில் ஆடு வளர்ப்பு கால்நடை பண்ணை தீவிரம்

காரைக்குடி : காரைக்குடி செட்டிநாடு கால்நடை பண்ணையில், பரணில் ஆடு வளர்ப்பு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. காரைக்குடி செட்டிநாட்டில் 1906 ஏக்கரில் கால்நடை பண்ணை அமைந்துள்ளது. இங்கு எட்டு ஆடு வளர்க்கும் கூடம் உள்ளது. 500-க்கும் மேற்பட்ட ஆடுகள் உள்ளன. தற்போது ரூ.5 லட்சம் செலவில் பரண்மேல் ஆடு வளர்க்கும் கூடம் அமைக்கப்பட்டுள்ளது. ஒரு கூடத்தில் 20 முதல் 30 ஆடுகள் வரை

வளர்க்க முடியும். பரண்மேல் ஆடு வளர்ப்பை விவசாயிகள் மேற் கொண்டால், ஆண்டுக்கு ரூ.ஒரு லட்சம் வரை வருமானம் ஈட்டலாம் என கால்நடை டாக்டர்கள் தெரிவிக்கின்றனர்.கால்நடை பண்ணை டாக்டர் ஒருவர் கூறும்போது: வெள்ளாடுகள் இரண்டு ஆண்டுக்கு மூன்று முறை ஈனும் தன்மை உடையது. பரண்மேல் ஆடு வளர்க்கும் நடைமுறை லாபம் ஈட்ட கூடியதாகும். 10 வெள்ளாடுகளுக்கு ஒரு ஆண் ஆடு போதும். இவற்றை மேய்ச்சலுக்கு விட முடியாது. இதன் கழிவு தாவரங்களுக்கு நல்ல உரமாகும். உணவாக, அடர் தீவனம், பசுந்தீவனம் வழங்கலாம். சினைகாலம் 5 மாதங்கள். சினை பிடித்த ஆடுகளை 100 நாட்களுக்கு பிறகு ஊட்டச்சத்து மிக்க உணவினை கொடுத்து பராமரிக்க வேண்டும். இனப்பெருக்க காலத்திற்கு முன்பு 10 முதல் 15 நாட்களுக்கு முன்பு ஊட்டச்சத்து மிக்க உணவினை அளிக்க வேண்டும். இதன் மூலம் அண்டத்தின் செயல்திறன், சினை பிடிக்கும் திறன் அதிகரிக்கும். விவசாயிகள், நேரடியாக வந்து பரண்மேல் ஆடு வளர்ப்பை, பார்வையிட்டு ஆலோசனை பெற்று கொள்ளலாம், என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>ஒழுங்குமுறை விற்பனை கூடங்களில் விளைபொருட்களை போடும் அன்றே விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா</u>**

விழுப்புரம், : விழுப்புரம் மாவட்டத்தில் இயங்கி வரும் ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விற்பனைக்கு கொண்டு வரப் படும் நெல், மணிலா, மக்காச்சோளம், உளுந்து மற்றும் இதர விளைப்பொருட்களுக்கு சரியான எடை போடப்படுகிறதா என்பதை உறுதிசெய்திடவும், சாக்குகள் உடனுக்குடன் வழங்கப்படுகிறதா என்பதை கண்காணிக்கவும் எவ்வித மறைமுகமாக பணம் பெறுகிறார்களா என்பதை கண்காணித்து

நடவடிக்கை எடுக்கவும், பணப்பட்டுவாடா அன்றே வழங்கவும் அனைத்து கண்காணிப்பாளர்களுக்கும் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் பணப்பட்டுவாடா குறித்து அவ்வப்போது புகார்கள் பெறப்படுகிறது. எனவே, ஒழுங்குமுறை விற்பனைக்கூட வியாபாரிகள், விவசாயிகள் கொண்டு வரும் விளை பொருட்களுக்கு நல்ல போட்டி விலை வழங்கிடவும், விலையிட்ட பொருட்களுக்கு அன்றே பணப்பட்டுவாடா நிலுவையின்றி வழங்கவும் அதன் விவரத்தை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் தெரிவிக்கவும் கேட்டுக்கொள்ளப் படுகிறது. தற்போது அனைத்து விற்பனைக் கூடங்களிலும் வரத்து அதிகமாக இருப்பதால் குவியல் விலை வழங்கி உறுதிசெய்து, சிட்டா வழங்க தாமதம் ஏற்படுகிறது. மேலும் நிர்வாக காரணங்களால் அன்றைய தினமே முழுமையான வரத்துக்களுக்கும் லாட் வழங்காத சூழ்நிலையில் அடுத்தநாள் முன்னுரிமை அடிப்படையில் லாட் வழங்கி விலையிடப்பட வேண்டு மென அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் விலையிடப்படும் விளை பொருட் களுக்கு இறுதிசெய்யப்படும் விலை ஒப்புகை இல்லாதபட்சத்தில் ஒழுங்குமுறை விற்பனைகூடத்தில் இருப்பு வைத்து அடுத்தடுத்த நாட்களில் விற்பனை செய்து கொள்ளலாம், என விழுப்புரம் ஆட்சியர் சம்பத் தெரிவித்துள்ளார்.

## <u>தீவன எடுப்பு கோழிகளில் குறையும் வானிலை மையம் தகவல்</u>

நாமக்கல், : தீவன எடுப்பு கோழிகளில் குறையும் என வானிலை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து நாமக்கல் கால்நடை வானிலை ஆலோசனை மையம் வெளியிட்டுள்ள வானிலை அறிக்கை: கோடை மழை மாவட்டத்தின் சில பகுதியில் பெய்யும் வாய்ப்பு உள்ளதாலும், காற்றின் வேகம் இயல்பை விட அதிகரித்து 8 கி.மீ வரை காணப்படுமாதலால், கோடையின் தாக்கம் அதிகமாக இருக்கும். தீவன எடுப்பு கோழிகளில் குறையதுவங்கும். முட்டை உற்பத்தியும் எடையும் குறையாமல் இருக்க தீவனத்தில் அமினோஅமிலம் சேர்க்கவேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அன்னை காவிரியுடன்

இணைந்த அன்றாட வாழ்க்கை தமிழகத்தில் ஓடிவரும் ஆறுகளில் காவிரிக்கு தனி சிறப்புண்டு. கர்நாடகா மாநிலம் குடகுமலையில் தலைக்காவேரியில் சிறு ஊற்றாக தோன்றி கபினி, ஹேரங்கி, லட்சுமணதீர்த்தம், ஆர்க்காவதி, சிம்ஸா, சொர்ணவதி ஆகிய கர்நாடக துணை நதிகளும், பவானி, அமராவதி, நொய்யல் ஆகிய தமிழக நதிகளையும் இணைத்து தஞ்சையை செழிக்க வைக்கும் காவிரி, கர்நாடகாவில் 320 கிலோ மீட்டரை கடந்து பிலிக்குண்டு வழியாக தமிழகத்தில் 416 கிலோ மீட்டர் செல்கிறது. சிவசமுத்திரத்திலும், ஒகேனக்கல்லிலும் அருவியாக கொட்டும் காவிரி, தமிழகத்தில் பரந்து விரிந்து மக்களின் தாகம் தணிக்கிறது. கரையோர நகரமான குமாரபாளையம் மக்களின் அன்றாட வாழ்க்கையில் இணைந்துள்ள காவிரியை, மாசுபடுத்தாமல் பயன்படுத்தும் பாங்கு, மக்களில் பலருக்கும் இல்லை என்பதே வருத்தமாக உள்ளது. தூரத்து நகரங்களான சேலம், நாமக்கல் மக்களின் தாகம் தணிக்கும் நதியாக விளங்கும் காவிரியை, கரையோர மக்கள் இன்னும் குப்பை கூளங்களை கொட்டும் சாக்கடையாகவும், கழிவுகளை விடும் ஓடையாகவும் பயன்படுத்தி வருகின்றனர். போதிய விழிப்புணர்வு இல்லாததால் நதியை மாசுபடுத்துவது அதிகரித்து வருகிறது. பொது நல அமைப்புகள் இணைந்து, கரையோர மக்களிடையே போதிய விழிப்புணர்வை ஏற்படுத்தினால், காவிரி கழிவுநீரோடையாக மாறுவதை தவிர்க்கலாம். அடுத்த தலைமுறைக்கும் அன்னை காவிரியை அர்ப்பணிக்கலாம்.

## <u>ஆனைமலை விற்பனை கூடத்தில் ரூ.67 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்</u>

ஆனைமலை, : பொள்ளாச்சியை அடுத்த ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்கு, நேற்று விவசாயிகள் கொண்டுவந்த கொப்பரை ரூ.7 லட்சத்துக்கு ஏலம் போனது. பொள்ளாச்சியை அடுத்த ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று கொப்பரை ஏலம் நடந்தது.

ஆனைமலை, வேட்டைக்காரன்புதூர், கோட்டூர், ஆழியார், ஒடையகுளம், அம்பராம்பாளையம் மற்றும் பல்வேறு கிராம பகுதிகளில் இருந்து, 43 விவசாயிகள் மொத்தம் 195 மூட்டை கொப்பரை கொண்டு வந்திருந்தனர். இதில், 122 மூட்டை முதல் தர கொப்பரையாகவும், 73 மூட்டை இரண்டாம் தர கொப்பரையாகவும் தரம் பிரிக்கப்பட்டு ஏலம் விடப்பட்டன. முதல் தர கொப்பரை ஒருகிலோ ரூ.71 முதல் ரு.88 வரையிலும், இரண்டாம் தர கொப்பரை ஒருகிலோ ரூ.64.50 முதல் ரூ.80 வரையிலும் ஏலம் போனது. விவசாயிகள் கொண்டு வந்த ஒன்பதரை டன் கொப்பரை ரூ.7லட்சத்துக்கு ஏலம்போனது. இதை 8 வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். நேற்று நடந்த கொப்பரை ஏலத்தின்போது, விவசாயிகள் வழக்கத்தை விட அதிகளவு கொப்பரை கொண்டு வந்திருந்ததால், ஏலம் விறுவிறுப்புடன் நடைபெற்றது என ஒழுங்குமுறை விற்பனைகூட கண்காணிப்பாளர் ஜெயராமகிருஷ்ணன் தெரிவித்தார்.

## திருச்சி மாவட்டத்தில் 4வது நாளாக கோமாரி நோய் தடுப்பூசி முகாம்

திருச்சி, : திருச்சி மாவட்டத்தில் 4வது நாளாக இன்று பல்வேறு இடங்களில் மாவட்ட நிர்வாகம் சார்பில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடக்கிறது. திருச்சி மாவட்டத்தில் கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோயை முற்றிலும் தடுக்க 8வது சுற்று தடுப்பூசி பணியினை மாவட்ட நிர்வாகம், ஊரகத்துறை, உள்ளாட்சி (ம) சுகாதாரத்துறை ஆகிய துறைகளை ஒருங்கிணைத்து கடந்த 1ம் தேதி முதல் மேற்கொண்டு வருகிறது. இன்று (4ம்தேதி) திருச்சி மாநகராட்சியில் திருமலைசமுத்திரம், திருவெறும்பூர் பகுதியில் வாழவந்தான்கோட்டை, மணிகண்டம் பகுதியில் கண்ணுடையான்பட்டி மற்றும் வேங்கைகுறிச்சி, மருங்காபுரி பகுதியில் தொட்டியப்பட்டி மற்றும் எண்டபுளி, தா.பேட்டை பகுதியில் கணேசபுரம், பள்ளிநத்தம், சாலப்பட்டி, உப்பிலியபுரம் பகுதியில் எரகுடி, துறையூர் பகுதியில் சிங்களாந்தபுரம், லால்குடி பகுதியில் வாளாடி,

சிறுமருத்தூர், புள்ளம்பாடி பகுதியில் வரகுப்பை, தாப்பாய், நம்புக்குறிச்சி, மண்ணச்சநல்லூர் பகுதியில் பிச்சாண்டார்கோவில், பூனாம்பாளையம், முசிறி பகுதியில் அய்யம்பாளையம், வெளியனூர் ஆகிய பகுதிகளில் இன்று தடுப்பூசி பணி நடக்கிறது. கால்நடை பராமரிப்புத் துறையினரால் காலை 6மணி முதல் 9மணி வரையிலும், பிற்பகல் 3மணி முதல் 5மணி வரையிலும் தடுப்பூசி மேற்கொள்ளப்படவுள்ளது.

## <u>கோமாரி நோய் தடுப்பூசி முகாம்</u>

கடவூர்,: கால்நடை பராமரிப்பு துறை மற்றும் ஆவின் பால் நிறுவனம் சார்பில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் தரகம்பட்டியில் நடந்தது. இம்முகாமிற்கு பால் உற்பத்தியாளர் சங்க தலைவர் பொன்னுச்சாமி தலைமை வகித்தார். ஊராட்சி தலைவர் மாரியப்பன், உற்பத்தியாளர் சங்க தலைவர் மாரியப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சங்க செயலாளர் முனியப்பன் வரவேற்றார். ஆவின் உதவி பொது மேலாளர் வேலுச்சாமி முகாமை துவக்கி வைத்தார். கால்நடை மருத்துவர் மணிவண்ணன் தலைமையிலான மருத்துவ குழுவினர் 600 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டனர். மேலும் 21ம் தேதி வரை வாழ்வார்மங்கலம், தென்னிலை, கீரனூர், வரவணை ஆகிய ஊராட்சிகளில் உள்ள 6 ஆயிரம் கால்நடைகளுக்கு இந்த தடுப்பூசி போடப்படுகிறது. முகா மில் கால்நடை ஆய்வாளர் கக் கன், பராமரிப்பு உதவியாளர் செல்வராஜ் மற்றும் பணியாளர் கள் பொன்னாண்டவர், ஜோசப், முனியப்பன், மருதை உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## <u>இயற்கை உரங்களைப் பயன்படுத்தி வேளாண் உற்பத்தியை பெருக்க வேண்டும் நெல் வயல் தின விழாவில் வலியுறுத்தல்</u>

புதுக்கோட்டை, : இயற்கை உரங்களை பயன்படுத்தி வேளாண் உற்பத்தியை பெருக்க வேண்டும் என்று கீரனூர் அடுத்த சப்பானிபட்டியில் நடைபெற்ற பாரம்பரிய நெல் வயல் தின விழாவில்

வலியுறுத்தப்பட்டது. புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர் அடுத்த தென்னதிரையன் ஊராட்சிக்கு உட்பட்ட சப்பாணிபட்டியில் சேத்தனா மானுஷி டிரஸ்ட், பசுமை பாரம்பரிய விதை உற்பத்தியாளர்கள் சங்கம் ஆகியவற்றின் சார்பில் பாரம்பரிய நெல் வயல் தின விழா நடத்தப்பட்டது. சப்பானிப்பட்டியில் உள்ள தனலெடசுமி மீன் பண்ணையில் நடைபெற்ற இவ்விழாவுக்கு கீரனூர் விதை உற்பத்தியாளர் சங்க நிர்வாகி கோவிந்தராஜ் தலைமை வகித்தார். புதுக்கோட்டை மாவட்ட வேளாண் துணை இயக்குநர் ஷாஜகான், வம்பன் தேசிய பயறுவகை ஆராய் ச்சி நிலைய பேராசிரியர் கீதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற சேத்தனா மானுஷி டிரஸ்ட் உறுப்பினரான மத்திய அமெரிக்காவை சேர்ந்த வேலாரி பேசியதாவது: மத்திய அமெரிக்காவில் நெல் விதைகளை ஆண்டுதோறும் அரசிடம் இருந்தே விவசாயிகள் வாங்குகின்றனர். அனைத்து வேளாண் பணிகளையும் இயந்திரம் மூலமே மேற்கொள்கின்றனர். ஆனால், இந்தியாவில் வேளாண் பணிகளில் நேரடியாக ஈடுபட்டுள்ள விவசாயிகள் நல்ல பலத்துடன் ஆரோக்கியமாக உள்ளனர். இருப்பினும், அரசிடம் இருந்து குறைவான விதைகளை பெற்று அதை உற்பத்தி செய்து அதை விற்பதற்கு கூட தகுந்த பணம் கிடைக்காமல் கஷ்டப்படுவது வேதனைக்குரியது. ஆனால், மத்திய அமெரிக்காவில் உள்ள விவசாயிகள் தங்கள் உற்பத்தி செய்யும் அனைத்தையும் அரசின் கொள்முதல் நிலையங்கள் மூலம் பல்வேறு நாடுகளுக்கு அனுப்பிவைத்து நல்ல வருமானம் பெறுகின்றனர். எனவே, இயற்கை உரங்களைப் பயன்படுத்தி வேளாண் உற்பத்தியை விவசாயிகள் பெருக்க வேண்டும் என்றார். விழாவில் பராம்பரிய விதை உற்பத்தியாளர்கள் மாறன், அரவிந்த், பழனிவேலு, ஆறுமுகம், நடராஜன், இயற்கை விவசாயி அப்பாவு பாலாண்டார், குண்றாண்டார் கோவில் வேளாண்மை அலுவலர் சங்கரலெட்சுமி, மற்றும் விவசாயிகள் திரளாக கலந்து கொண்டனர். முன்னதாக, கீரனூர் பாரம்பரிய விதை உற்பத்தியாளர்கள் சங்க நிர்வாகி

தனலெட்சுமி வரவேற்றார். முடிவில் மனுஷி நிறுவன நிர்வாகி அமுதா ஜெயராமன் நன்றி கூறினார்.

**<u>காணை நோய் தடுப்பூசி முகாம் மார்ச்.21 வரை நடக்கிறது</u>**

சிவகங்கை, : சிவகங்கையில் கால்நடைகளுக்கு காணை தடுப்பூசி முகாம் மார்ச்.21 வரை நடக்கிறது. இதுகுறித்து கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் வெளியிட்ட அறிக்கை: 'சிவகங்கை மாவட்டத்தில் மார்ச்.21 வரை கால்நடைகளுக்கு காணை தடுப்பூசி போடும் முகாம் நடக்க உள்ளது. 8வது தடுப்பூசி முகாமான இதில் 2 லட்சத்து 7 ஆயிரத்து 850 மாடுகள் மற்றும் பிற கால்நடைகளுக்கும் தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப் பட்டுள்ளது. கடந்த ஆண்டு 7வது சுற்றில் தடுப்பூசி போட்டதால் நோயின் தாக்கம் கட்டுப்படுத்தப்பட்டது. கலப்பின மாடுகளை அதிகம் தாக்கும் இந்நோய் எருமைகள், செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள், பன்றி இனங்களையும் தாக்குகிறது. நோய் தாக்கினால் கறவை மாடுகளில் பால் உற்பத்தி அதிகம் பாதிக்கப்படும். இதுதவிர மாடுகள் சினை பிடிப்பது, எருதுகள் வேலை செய்யும் திறன் குறைவது, இளம் கன்று இறப்பு உள்ளிட்டவையும் நேரிடும். இந்நோய் எளிதில் பரவக்கூடியதால் நோய் பாதித்த கால்நடைகளை தனிஇடத்தில் பராமரிக்க வேண்டும். வெளியே மேய்ச்சலுக்கு அனுப்பாமல் உடனடியாக கால்நடை மருத்துவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும். கால்நடைகளுக்கு காணை தடுப்பூசி போட விவசாயிகள் வட்டார கால்நடை மருந்தகங்களை தொடர்பு கொள்ளவும். இவ்வாறு தெரிவிக்கப் பட்டுள்ளது.

**<u>மண் மணக்க' நெய் மணக்கும்</u>**

விவசாயத்தை நம்பியவர் கள் இந்த ஊரில் அதிகம் வசிக்கின்றனர். சுற்றிலும் பசுமை சூழ்ந்த வயல்கள், வாழை, தென்னை, திராட்சை, காய்கறி விவசாயமே இந்த ஊரின் பெருமையாக உள்ளது. அனைத்திற்கும் பெரியாறு தண்ணீரே முக்கியம் என்றாலும் இயற்கை

மழை என்பது அதனை விட அவசியமானது. எனவே, மழை பெய்யாவிட்டால் இங்குள்ள சர்வமதத்தை சேர்ந்த விவசாயிகளும் ஊருக்கு ஒதுக்குப்புறமாக உள்ள கரிசல்களம் என்ற இடத்தில் ஒன்று கூடு வர். அங்கு சிறப்பு பிரார்த்தனைகள் நடைபெறும். பின்பு நெய் மணம் கமழ விருந்து படைப்பதுண்டு. இதில் இந்த ஊர்களை சேர்ந்த ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொள்வர். அதன்பின்பு மழை கொட்டோ கொட்டென்று கொட்டும். விவசாயம் செழிக்கும் என்பது நம்பிக்கை.

## <u>வேளாண் கண்டுணர்வு சுற்றுலா விவசாயிகளுக்கு அழைப்பு</u>

புதுச்சேரி, : புதுச்சேரி அரசு வேளாண்துறை மத்திய அரசின் நிதியுதவியுடன் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. அந்த திட்டத்தின் ஒரு பகுதியாக வேளாண் கண்டுணர்வு சுற்றுலா செயல்படுத்தப்படவுள்ளது. அதில் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தை புதுச்சேரி மாநிலத்துக்கு செயல்படுத்தும் அதிகாரிகளும் வேளாண் பெருமக்களும் பங்கு பெறுகின்றனர். இந்த சுற்றுலாவில் புதுவை மற்றும் காரைக்கால் பகுதியை சேர்ந்த தகுதிவாய்ந்த 10 விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர். சுற்றுலாவில் பங்குபெற விரும்பும் விவசாயிகள் தங்கள் பகுதியைச் சேர்ந்த உழவர் உதவியகத்தில் அதற்கான விண்ணப்ப படிவத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை உரிய ஆவணங்கள் நகலோடு இணைத்து அந்தந்த உழவர் உதவியகத்தில் மார்ச் 9ம் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும்.தகுதியான விவசாயிகள் தேர்வுக்குழு மூலம் தேர்ந்தெடுக்கப்படுவார்கள் என கூடுதல் வேளாண் இயக்குனர் ரவிப்பிரகாசம்தெரிவித்துள்ளார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## பெருந்துறை வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் ரூ.80 லட்சத்துக்குகொப்பரை தேங்காய் விற்பனை



பெருந்துறை, பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.80 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் விற்பனை ஆனது.

கொப்பரை தேங்காய்

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று கொப்பரை தேங்காய் சிறப்பு ஏலம் நடந்தது. இந்த ஏலத்துக்கு சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, கோவை, ஈரோடு மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் இருந்து விவசாயிகள் கொப்பரை தேங்காய்களை விற்பனைக்காக கொண்டு வந்து இருந்தனர்.

<u>ரூ.80 லட்சத்துக்கு</u>

மொத்தம் 1,799 மூட்டைகளில் 90 ஆயிரம் கிலோ எடை கொண்ட கொப்பரை தேங்காய்கள் விற்பனைக்காக கொண்டு வரப்பட்டு இருந்தன. இதில் முதல் தரம் கொப்பரை தேங்காய் (கிலோ) 94 ரூபாய் 75 காசு முதல் 96 ரூபாய் 25 காசு வரை ஏலம் போனது. 2–ம் தரம் கொப்பரை தேங்காய் (கிலோ) 51 ரூபாய் 40 காசு முதல் 94 ரூபாய் 10 காசு வரை ஏலம் போனது. மொத்தம் ரூ.80 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் விற்பனை

ஆனது. கடந்த வாரம் நடந்த ஏலத்தை விட கிலோவுக்கு 1 ரூபாய் குறைவாக கொப்பரை தேங்காய் ஏலம் போனது. இந்த ஏலத்தில் சென்னை, விருதுநகர், தூத்துக்குடி, காங்கயம், பல்லடம், கோபி, ஊத்துக்குளி ஆகிய பகுதிகளில் இருந்து வந்திருந்த எண்ணை மில் முகவர்கள் கொப்பரை தேங்காய்களை போட்டி போட்டு ஏலம் எடுத்துச் சென்றனர்.

**கால்நடைகளுக்கு கோமாரி நோய் வராமல் தடுக்க மருந்து கொடுக்கும் முறைகள்**



ஈரோடு, கால்நடைகளுக்கு கோமாரி நோய் வராமல் தடுக்க மருந்து கொடுக்கும் முறைகள் பற்றி வேளாண்மை அதிகாரி விளக்கம் அளித்துள்ளார்.கால்நடைகளை தாக்கும் தொற்று நோய்களில் கோமாரி நோய் முக்கியமான ஒன்றாகும். கோமாரி நோயை கால்நோய், வாய்நோய், கால்கட்டு வாய்ச்சப்பை, வாய் கோமாரி, காணை நோய் என்று கூறுவார்கள். மிகவும் வேகமாக பரவும் இந்த நோய், பாதிக்கப்பட்ட கால்நடைகளில் இறப்பு சதவீதம் குறைவாக இருந்தாலும் கூட, நோயின் தாக்குதல் அதிகமாக இருப்பதால் பெரும் பொருளாதார சேதத்தை விளைவிக்கிறது. குறிப்பாக கறவை இனங்களில் பால் உற்பத்தித்திறனும், உழவு மாடுகளில் வேலைத்திறனும், இறைச்சிக்கென வளர்க்கப்படும் கால்நடைகளின் உடல் எடையும் குறைகின்றன. சில சமயங்களில் பாதிக்கப்பட்ட கலப்பின பசுக்கள் மறுபடியும் சினை பிடிப்பதில் பிரச்சினைகள் ஏற்படுகின்றன. கோமாரி நோய் ஒரு நச்சுயிரியால் ஏற்படுகின்றது. உலகில் கோமாரி நோயை ஏற்படுத்தும் நச்சுயிரியில் எஸ்.ஏ.டி.1, 2, 3, ஏ, ஓ, சி. மற்றும் ஆசியா–1 என்று ஏழு வகைகள் உள்ளன. இந்த ஏழு வகைகளில் மொத்தமாக 60–க்கும்

மேற்பட்ட உட்பிரிவுகள் உள்ளன. நம்முடைய நாட்டில் ஏ, ஓ, சி, ஆசியா1 போன்ற நச்சுயிரியால் கோமாரி நோய் பரவுகிறது.

தடுப்பூசி

வருடத்திற்கு வருடம் இந்த நச்சுயிரி உட்பிரிவு வகைகளின் அமைப்பு மாறிக்கொண்டே போகிறது. அதனால் தான் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டிருந்தாலும் கூட, சில சமயங்களில் மறுபடியும் இந்த நோய் தாக்க வாய்ப்பு உள்ளது. கால்நடைகளை ஒரு இடத்தில் இருந்து மற்றொரு இடத்துக்கு கொண்டு செல்லுதல், எல்லா கால்நடைகளுக்கும் தடுப்பூசி போடாமல் இருப்பது, தடுப்பூசி வகையும், நோய்வகையும் வெவ்வேறாக இருப்பது ஆகிய காரணங்களினால் கோமாரி நோயை கட்டுப்படுத்துவது சிரமமாகும். பசு, எருமை, செம்மறியாடு, வெள்ளாடு, பன்றி, மான், காட்டெருமை, ஒட்டகம், ஒட்டகச்சிவிங்கி போன்ற விலங்குளை கோமாரி நோய் தாக்கும். நோய் தாக்கிய கால்நடைகளிடம் இருந்து மற்ற கால்நடைகளுக்கு நேரடியாகவும், காற்றின் மூலமாகவும் பரவுகிறது. மேலும் நோய்க்கிருமி கலந்த புல் மற்றும் தீவனங்களை உட்கொள்வதாலும் இந்நோய் பரவுகிறது. குறிப்பாக அடைமழைக்காலங்கள், பனிக்காலங்களில் அதிக அளவில் நோய் பரவுகின்றது. பொதுவாக நோய்கண்ட காலநடைகளின் கழிவு பொருட்கள், எச்சில், பால் மூலமாக கிருமிகள் வெளியேற்றப்படுகின்றன. நோய்கண்ட கால்நடைகளில் ஏற்படும் கொப்புளங்களில் கோமாரி நோய்க்கிருமி அதிக அளவில் உள்ளது.

புழுக்கள்

நோய்தாக்கி குணமான பசு மற்றும் எருமைகளில் ஏறக்குறைய 3 வருடங்களுக்கு இந்த நோய்க்கிருமி தங்கி இருக்கும் என கண்டறியப்பட்டு உள்ளது. செம்மறி மற்றும் வெள்ளாடுகளை தீவிரமாக இந்நோய் தாக்குவதில்லை. நோய் கண்ட கால்நடைகள் தீவனம் எடுக்காது. அதிகமான காய்ச்சல் இருக்கும். நுரையுடன் கூடிய எச்சில் அதிக அளவில் சுரந்து வடியும். கால்நடைகள் வலியின் காரணமாக

வாயை திறந்து மூடுவதையும், வாயை கடித்துக்கொண்டு ஒலி எழுப்புவதையும் காணலாம். நீர்கோர்த்த கொப்புளங்கள் நாக்கு, தாடையின் மேல் உள்ள பகுதி, ஈறு மற்றும் வாயின் உட்புறம், கால்குளம்பின் இடைப்பகுதி, கால் குளம்பை சுற்றியும் ஏற்படுகின்றன. கறவை மாடுகளில் மடிக்காம்புகளில் கூட கொப்புளங்கள் தோன்றும். கால்நடைகளின் குளம்புகளில் கொப்புளங்கள் உடைந்து புண்கள் உண்டாவதால், கால்நடைகள் நடந்து செல்ல முடியாமல் நொண்டும். சில சமயங்களில் குளம்பு புண்களில் புழுக்கள் கூட உருவாகலாம்.

<u>இருதய தசைகள்</u>

கன்றுகளை பொறுத்தவரை இந்நோய்க்கிருமி இருதய தசைகளை தாக்கி இறப்பை ஏற்படுத்துகின்றது. ஒரு பண்ணையில் கோமாரி நோய் தோன்றியவுடன் முதலில் நோய் பாதித்த கால்நடையை மாற்ற கால்நடைகளிடம் இருந்து பிரித்து, தனி இடத்தில் வைத்து பராமரிக்க வேண்டும். பண்ணைக்குள் வண்டிகள், ஆட்கள், மற்ற கால்நடைகளை கொண்டு செல்ல கூடாது. நோய் பாதித்த கால்நடைகளை பராமரிக்கும் பணியாளர்கள் நல்ல நிலையில் இருக்கும் கால்நடைகளை சேர்த்து பராமரிக்க கூடாது. மேலும் நோய் தாக்கிய கால்நடைகளுக்கு பயன்படுத்திய வாளிகள், தொட்டிகள் போன்றவற்றை மற்ற கால்நடைகளின் பயன்பாட்டுக்கு கொண்டு செல்ல கூடாது. நோய் தாக்கிய பசுவிடம், கன்றுகளை பால் குடிக்க விடக்கூடாது. தொழுவத்தை சுத்தமாக வைத்திருக்கவேண்டும்.

<u>பண்ணை</u>

2 சதவீத பொட்டாசியம் பர்மாங்கனேட் கரைசல் கொண்டு கால்நடைகளின் புண்களை கழுவ வேண்டும். புண்களில் புழுக்கள் இருந்தால் டர்பன்டைன் எண்ணையைக்கொண்டு சுத்தம் செய்ய வேண்டும். ஈக்கள் மற்றும் புண்களின் மேற்பகுதியை சுற்றி தடவ வேண்டும். பண்ணைக்கு புதிதாக கொண்டு வரும் கால்நடைகளை பண்ணையில் உள்ள மற்ற கால்நடைகளோடு சேர்த்து கட்டாமல் 30

நாட்களுக்கு தனியே வைத்திருக்க வேண்டும். இந்த காலத்தில் புதிதாக வந்த கால்நடைகளை நன்கு கண்காணித்த பிறகே பண்ணையில் உள்ள மற்ற கால்நடைகளோடு சேர்க்க வேண்டும். கோமாரி நோய் வராமல் தடுக்க ஏ, ஓ, சி, ஆசியா –1 வகை கிருமிகளுக்கு எதிரான பாலிவேலன்ட் என்கிற பல்வகை கோமாரி தடுப்பூசி போட வேண்டும். இந்த தடுப்பூசி யை கன்றுகளுக்கு முதலில் 4 மாதத்தில் போடலாம். கால்நடைகளுக்கு வருடத்திற்கு 2 முறை போடுவது நல்லது.

தடுப்பூசி

கோமாரி நோய் பரவாமல் இருக்க எல்லா கால்நடைகளுக்கும் தடுப்பூசி போடவேண்டும். குறிப்பாக கால்நடை மந்தைகளின் நோய் எதிர்ப்பு சக்தி முழுமையாக இருக்க வேண்டும். இதை பராமரிக்க அனைத்து கால்நடை களுக்கும் ஒரே சமயத்தில் தடுப்பூசி போடுவது சிறந்தது ஆகும்.தற்போது கோமாரி நோய்க்கான தடுப்பூசி போடும் பணி கால்நடை பராமரிப்புத் துறையின் அனைத்து கால்நடை டாக்டர்கள் மூலம் போடப்பட்டு வருகிறது. இந்த தகவலை கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் ரா.யசோதை தெரிவித்துள்ளார்.

## அரவை பணிக்காக 2,226 டன் நெல் சரக்குரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது



தஞ்சை மாவட்டத்தில் இருந்து திருவள்ளூர் மாவட்டத்திற்கு 2,226 டன் நெல் அரவைக்காக சரக்கு ரெயிலில் அனுப்பி வைக்கப்பட்டது.

நெல்அரவை

தஞ்சை மாவட்டத்தில் 2014-15-ம் ஆண்டு சம்பா, தாளடி பருவத்தில் 1 லட்சத்து 35 ஆயிரத்து 689 எக்டேரில் நெல் சாகுபடி நடைபெற்றுள்ளது. தற்போது சம்பா, தாளடி நெல் அறுவடை பணி நடைபெற்று வருகிறது. அறுவடை செய்யப்பட்ட நெல்லை விவசாயிகளிடம் இருந்து வாங்குவதற்காக தஞ்சை மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல்

நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. விவசாயிகள் ஆர்வமுடன் அறுவடை செய்த நெல்லை கொள்முதல் நிலையங்களுக்கு கொண்டு செல்கின்றனர். விவசாயிகளிடம் இருந்து பெறப்பட்ட நெல் மூட்டைகள் அங்கேயே அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. கொள்முதல் செய்யப்பட்ட இந்த நெல் அரவைக்காக பிற மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுவது வழக்கம்.

திருவள்ளூர்மாவட்டத்துக்கு...

அதன்படி தஞ்சை மாவட்டத்தில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் வைக்கப்பட்டிருந்த நெல் மூட்டைகள் அரவைக்காக லாரியில் ஏற்றப்பட்டு, தஞ்சை ரெயில் நிலையத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்னர் லாரிகளில் இருந்த நெல்மூட்டைகள் அனைத்தை யும் தொழிலாளர்கள் சரக்கு ரெயிலில் ஏற்றினர். மொத்தம் 29 வேகன்களில் 1,113 டன் நெல் ஏற்றப்பட்டன. பின்பு நெல் மூட்டைகள் ஏற்றப்பட்ட இந்த வேகன்கள் தஞ்சையில் இருந்து திருவள்ளூர் மாவட்டத்திற்கு அரவைக்காக அனுப்பி வைக்கப்பட்டது. இதேபோல் கும்பகோணம் ரெயில் நிலையத்தில் இருந்து 29 வேகன்களில் 1,113 டன் நெல் அரவைக்காக திருவள்ளூர் மாவட்டத்திற்கு அனுப்பி வைக்கப் பட்டது. தஞ்சை மாவட்டத்தில் இருந்து நேற்று மட்டும் 2,226 டன் நெல் அரவைக்காக அனுப்பி வைக்கப்பட்டது.

## மாவட்டம் முழுவதும் 4–வது நாளாக மாலை நேரத்தில் பெய்த மழை பொதுமக்கள் மகிழ்ச்சி



தேனி, தேனி மாவட்டத்தில் கடந்த 4 நாட்களாக மாலை நேரத்தில் மழை பெய்து வருகிறது. இதனால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

தேனியில் மழை

தேனி மாவட்டத்தில், கடந்த 1½ மாதங்களாக பகல் நேரங்களில் வெயிலின் தாக்கம் அதிக அளவில் இருந்தது. கடந்த 3 நாட்களுக்கு முன்பு பகலில் வெயில் வாட்டி வதைத்த போதிலும், மாலை நேரத்தில் திடீரென பலத்த மழை பெய்து மக்களை மகிழ்ச்சியில் ஆழ்த்தியது. தொடர்ந்து மறுநாள் பகலில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்த நிலையில், மாலையில் மழை பெய்தது. தேனியில் மாலை நேரங்களில் பெய்யும் இந்த மழை 4–வது நாளாக நேற்றும் பெய்தது. நேற்று பகலில் வெயிலின் தாக்கம் கடுமையாக இருந்தது. இந்த நிலையில் மாலை 4 மணியளவில் பலத்த காற்றுடன் மழை பெய்தது. சாரல் மழையாக தொடங்கிய இந்த மழை சில நிமிடங்களில் பலத்த மழையாக கொட்டியது. சுமார் 1 மணி நேரம் பெய்த இந்த மழை சிறிது நேரம் ஓய்ந்தது. பின்னர் மீண்டும் மழை பெய்யத் தொடங்கி இரவு 8 மணி வரை விட்டு, விட்டு சாரல் மழையாக பெய்து கொண்டு இருந்தது.

<u>முல்லைப்பெரியாறு அணை</u>

தேனி மட்டும் இன்றி தேனி மாவட்டத்தில் பெரியகுளம், கூடலூர், லோயர்கேம்ப் போன்ற இடங்களிலும் நேற்று மாலை பலத்த மழை பெய்தது. கம்பம், சின்னமனூர், உத்தமபாளையம், போடி போன்ற இடங்களில் சாரல் மழை பெய்தது. முல்லைப் பெரியாறு அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளிலும் நேற்று மாலை மழை பெய்துள்ளது. நேற்றைய நிலவரப்படி, அணையின் நீர்மட்டம் 112.30 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 250 கனஅடி நீர்வரத்து உள்ளது. தேனி மாவட்ட குடிநீர் தேவைக்காக வினாடிக்கு 250 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. அணையில் 1,279 மில்லியன் கனஅடி நீர் இருப்பு உள்ளது.

<u>மழை அளவு</u>

நேற்று முன்தினம் பெய்த மழை அளவு (மில்லி மீட்டரில்):–

முல்லைப்பெரியாறு அணை நீர்ப்பிடிப்பு பகுதி – 12.4, தேக்கடி – 3.4, சோத்துப்பாறை 3. மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக மாலை

நேரங்களில் பெய்து வரும் மழையால் பொதுமக்களும், விவசாயிகளும் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர். கோடை கால குடிநீர் தட்டுப்பாட்டில் இருந்து காப்பாற்றும் வகையில் இந்த மழை பெய்து வருவதாக எண்ணி பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்து உள்ளனர்.

**<u>கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் முகாமை கலெக்டர் திடீர் ஆய்வு</u>**



தேனி, தேனி மாவட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் கால்நடைகளுக்கு கால் மற்றும் வாய்க்காணை நோய் தடுப்பூசி போடும் பணிகள் நடந்து வருகிறது. ஒன்றிய பகுதிகளில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. அதன்படி தேனி கருவேல்நாயக்கன்பட்டியில் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் முகாம் நேற்று நடந்தது. முகாமில் கால்நடை மருத்துவ குழுவினர், கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் பணியில் ஈடுபட்டனர். இந்த முகாமை மாவட்ட கலெக்டர் வெங்கடாசலம் திடீர் ஆய்வு செய்தார். அப்போது அவர், முகாமிற்கு அழைத்து வரப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கை குறித்தும், அவற்றிற்கு அளிக்கப்படுகின்ற சிகிச்சை மற்றும் தடுப்பூசி போடும் பணி தொடர்பாகவும் விசாரித்தார். கால்நடைகள் விடுபடாமல் அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி போட வேண்டும் என்று கால்நடை பராமரிப்புத்துறை அலுவலர்களுக்கு கலெக்டர் அறிவுரை வழங்கினார். ஆய்வின் போது கால்நடை பாராமரிப்புத்துறை அதிகாரிகள் உடன் இருந்தனர்.

<u>உணவு பயிர்கள் சேதமாவதை தடுக்க நடவடிக்கை கலெக்டர் மதிவாணன் தகவல்</u>



எலிகளால் உணவு பயிர்கள் சேதமாவதை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கலெக்டர் மதிவாணன் கூறினார்.

பயிற்சிமுகாம்

திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் விவசாயிகளுக்கான உணவு பயிர்களுக்கு சேதம் விளை விக்கும் எலிகளை கட்டுப் படுத்துவது குறித்த பயிற்சி முகாம் நடை பெற்றது. திருவாரூர் மாவட்ட கலெக்டர் மதிவாணன் பயிற்சி முகாமை தொடங்கிவைத்துபேசினார்.

அப்போதுஅவர்கூறியதாவது:-

வேளாண்மை தொழில்நுட்ப முகமையின் நிதியை கொண்டு வயல்களில் எலிகளை கட்டுப் படுத்தும் பயிற்சி நடக்கிறது. இந்த முகாமில் முதல் கட்டமாக நீடாமங்கலம், வலங்கைமான் ஆகிய வட்டாரங்களை சேர்ந்த 80விவசாயிகளுக்குபயிற்சிஅளிக்கப்படும்.

எலிகளால்சேதம்

வயல்களில் எலிகளின் எண் ணிக்கை அதிகமானால் உணவு பயிர்களுக்கு சேதம் ஏற்படும். மேலும் எலிகள் கடித்த உணவு பயிர்கள், எலி கள் நடமாடிய தண்ணீர் ஆகி யவற்றின் மூலமாக பிளேக், லெப்டோபஸ்ரோசிஸ், சால்மனோலோசிஸ் உள்ளிட்ட கொடி நோய்கள் பரவும். இதை தடுப்பதற்காக விவ சாயிகளுக்கு பயிற்சி அளிக் கப்படுகிறது. இந்த முகாமில் வயல்களில் எலிகளின் நட மாட்டத்தை கண்டறியும் முறை, அழிக்கும் முறை குறித்து நேரடியாக விளக்கம் அளிக்கப்படும். இதன் மூலமாக உணவு பயிர்களில் ஏற்படும் சேதத்தை தவிர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. இது உணவு உற்பத்தியை அதிகரிக்கும். இவ்வாறு கலெக்டர் கூறினார்.

கையேடுவெளியீடு

முன்னதாக வயல்களில் எலிக்கட்டுப்பாடு குறித்த கையேட்டை மாவட்ட கலெக்டர் வெளியிட்டார். நிகழ்ச் சியில் வேளாண்மை இணை இயக்குனர் மயில் வாகணன், வேளாண்மை அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் காமராஜ், உதவி இயக்குனர் இளஞ்செழியன், நீடாமங்கலம் ஒன்றியக் குழு தலைவர் ராஜேந்திரன், தஞ்சாவூர் மத்திய கூட்டுறவு வங்கி துணை தலைவர் சங்கர் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## மகளிர் குழுவினர் வேளாண்மை சார்ந்த தொழில்களை தொடங்கி வாழ்வாதாரத்தை உயர்த்தி கொள்ள வேண்டும் கலெக்டர் ராஜாராமன் பேச்சு



மகளிர் குழுக்கள் வேளாண் சார்ந்த தொழில்கள் தொடங்கி தங்கள் வாழ்வாதாரத்தை உயர்த்தி கொள்ள வேண்டும் என கலெக்டர் ராஜாராமன்கூறினார்.

பயிற்சிமுகாம்

விருதுநகர் அருகே கோவி லாங்குளம் வேளாண்மை அறி வியல் நிலையத்தில் அம்மா பண்ணை மகளிர் மற்றும் உணவு பாதுகாப்பு குழுக் களுக்கான திறன் மேம்பாட்டு பயிற்சி முகாம் நடைபெற்றது.பயிற்சி முகாமை தொடங்கி வைத்து விருதுநகர் மாவட்ட கலெக்டர் ராஜாராமன் பேசும்போதுகூறியதாவது:–

வேளாண்மை விளை பொருள்களான கம்பு, சோ ளம், குதிரைவாலி, திணை போன்ற சிறுதானியங்களை கொண்டு இயற்கையான முறையில் கார வகைகள், பிஸ் கெட் வகைகள், இனிப்பு வகை கள் தயாரித்து வரு மானம் ஈட்டுவது குறித்து இங்கு பயிற்சி வழங்கப் படுகிறது.

வாழ்வாதாரம்

நவீன முறையில் செம்மறி ஆடுகள், வெள்ளாடுகள் வளர் ப்பு, கறவை

மாடுகள் வளர்த்து பால் பொருள்கள் தயாரித்தல், கோழிப் பண்ணை கள் அமைத் தல்,பண்ணைக் கழிவுகளை கொண்டு மண்புழு உரம் தயாரி த்தல், காளான் வளர்த்தல், காய் கறி பயிர்களில் துல்லியம் பண் ணையம் அமைத்து அதிக வரு வாய் ஈட்டுவது தொடர்பாக பயிற்சி அளிக்கப் படுகிறது. இந்த முகாமில் பண்ணை மக ளிர் குழுக்கள், சிறந்த முறையில் பயிற்சி பெற்று வேளாண்மை தொழில்கள் சார்ந்த தொழில் கள் தொடங்கி அதிக வரு வாயை ஈட்டி தங்கள் வாழ்வா தாரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்றார். முகாமில் வேளாண்மை துறை இணை இயக்குனர் சுப்பையா, வேளா ண்மை அறிவியல் நிலைய தலைவர் மற்றும் பேராசிரியர் பால் பாண்டி, உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் செண்பகராஜ், வேளாண்மை திட்ட வணிக அலுவலர் முத்து முனியாண்டி, தோட்டக் க லத்துறை துணை இயக்குனர் (பொறுப்பு) ராதாகிருஷ் ணன் மற்றும் பண்ணை மகளிர் குழு வினர் கலந்து கொண்டனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>கொழுப்பைக் கரைக்கும் கொட்டார சம்பா</u>**




கொட்டார சம்பா நெல் கன்னியாகுமரி மாவட்டத்துக்கு உரிய நெல் ரகம். இதற்கு மொழிக் கருப்பு சம்பா என்ற பெயரும் உண்டு. இயற்கைச் சீற்றங்களைத் தாங்கி வளரக்கூடிய நெல் ரகம். கொட்டாரம் என்றால் அரண்மனை என்று அர்த்தம். அரசர்களின் குடும்பத்துக்காகவே

கொட்டார சம்பா நெல்லை நாஞ்சில் நாட்டு மக்கள் உற்பத்தி செய்து வழங்கிவந்துள்ளனர்.

**முதன்மை உணவு**

இந்த ரகம் நூற்று ஐம்பது நாள் வயதுடையது. ஐந்தடி வரை வளரும். மோட்டா ரகம், மத்திய காலப் பயிர், மஞ்சள் நெல், சிவப்பு அரிசி, பாரம்பரிய நெல் ரகங்களில் மாவுச் சத்து (கார்போஹைட்ரேட்) குறைந்த அளவு கொண்ட நெல் ரகம். பல உணவு வகைகளுக்குப் பயன்படுத்தி னாலும் கேரளத்தில் பிரசித்தி பெற்ற புட்டு - கடலைக்கறிக்கும் பெயர் பெற்றது. கன்னியாகுமரி மாவட்டத்தில் நாஞ்சில் நாட்டு மக்கள் பிரதான உணவாக கொட்டார சம்பா அரிசியை மட்டுமே சாப்பிட்டு வந்துள்ளார்கள். இந்த அரிசியை, தேங்காய்த் துருவல் சேர்த்துச் சாப்பிட்டால் சுவை கூடும். இயல்பாகவே இனிப்புச் சுவை அதிகம் கொண்டது.

**மருத்துவ குணம்**

இந்த அரிசியை உண்பதால், மூளை வளர்ச்சியும் நோய் எதிர்ப்புச் சக்தியும் அறிவு வளர்ச்சியும் அதிகரிக்கும் என்பது நம்பிக்கை. கொட்டார சம்பா அரிசியில் குழந்தைகளுக்கு உணவளித்துவந்தால், நோய் தாக்காமலும் ஆரோக்கியத்துடனும் இருப்பார்கள். பேறுகாலப் பெண்களுக்கு இந்த அரிசியில் பத்தியக் கஞ்சி வைத்துக் கொடுத்தால், தாய்ப்பால் அதிகம் சுரக்கும். மேலும், பருவமடைந்த பெண்கள் தொடர்ந்து இந்த அரிசியைச் சோறாக்கி சாப்பிட்டு வந்தால் உடல் வலிமை கூடும். அதேபோல, கன்று போட்ட மாடுகளுக்கும் கொடுக்கலாம். உடலில் தேவைக்கு அதிகமாக உள்ள கொழுப்பைக் குறைக்கும் மருத்துவ குணம் கொண்டது கொட்டார சம்பா நெல்.

நெல் ஜெயராமனைத் தொடர்புகொள்ள: 9443320954.

## மண் பயனுறப் பாடுபட்ட சிந்தனையாளர்



ஜே.சி. குமரப்பாவின் ஆய்வுகளில் முத்தாய்ப்பானது 'மன்னுமைப் பொருளியம்' (Economy of Permanance). இது இன்றைய உலகுக்கு அத்தியாவசியமான கருத்தியலாக உள்ளது. சூழலியல் சீர்கேடுகளும், இயற்கை வளங்களின் பற்றாக்குறையும், பெரும் அழிவையும் உருவாக்கியுள்ள இச்சூழலில் பசுமைச் சிந்தனையை முன்வைத்த மேதையாகக் குமரப்பா திகழ்கிறார். எந்த ஒரு பொருள் உற்பத்தி முறையும் இயற்கையின் சுழற்சியில் தன்னை இணைத்துக்கொள்ள வேண்டும். அதற்கு மாறாகப் போகும்போது, பெரும் தொல்லைகள் உருவாகும்.

**தீராத வளங்கள்**

இன்றைய உலகம் நிலக்கரி, கன்னெய் (பெட்ரோல்), இரும்பு, செம்பு, தங்கம் ஆகியவற்றைப் பெரிதும் சார்ந்துள்ளது. இவை ஒரு குறிப்பிட்ட அளவே இருக்கக்கூடியவை, குறைந்த காலத்துக்கு மட்டுமே கிடைக்கக்கூடியவை. ஆனால் ஆற்றில் ஓடும் நீரும், காட்டில் வளர்ந்துகொண்டு இருக்கும் மரங்களும் தொடர்ச்சியாகக் கிடைக்கக் கூடியவை. இவை மன்னியமானவை அதாவது நிரந்தரமானவை, தொடர்ந்து மக்களுக்குக் கிடைக்கக்கூடியவை. அவர் இதைத் தேக்கப் பொருளியம் என்றும், ஓட்டப் பொருளியம் என்றும் பிரிக்கிறார். கன்னெய் வளம் பெருமளவு கிடைத்துக் கொண்டிருந்த காலத்திலேயே, அதன் போதாமையைப் பற்றி சிந்தித்தவர் குமரப்பா. புதுப்பிக்கக்கூடிய வளங்களைப் பற்றியும், புதுப்பிக்க இயலாத வளங்களைப் பற்றியும் (Renewable and Non-renewable Resources) தெளிவான பார்வை

அவருக்கு இருந்தது. அது மட்டுமல்ல, சூழலைக் கெடுக்காத வளர்ச்சியே அமைதியைத் தரும். அப்படி இல்லாமல் வரைமுறையற்று இயற்கை வளங்களைக் கொள்ளையடித்தால் முடிவற்ற போட்டி, குழப்பம் மற்றும் உலகப் போர்களுக்கே வழிவகுக்கும் என்றார்.

**மறைக்கப்பட்டார்**

சூமேக்கர் எழுதிய 'சிறியதே அழகு' (Small is beautiful) என்ற உலகப் புகழ்பெற்ற நூலில் குமரப்பாவின் சிந்தனைகள் விளக்கப்பட்டுள்ளன. ஆனால், 'புத்தப் பொருளியல்' என்ற தலைப்பின் கீழ் குமரப்பாவின் கருத்துகளை அவர் பேசியுள்ளார். குமரப்பாவைப் பொறுத்தளவில், அவர் கிறித்தவராக இருந்தபோதிலும் தனது பொருளியல் கொள்கைகளில் எந்த மதத்தையும் முன்னிறுத்தவில்லை. உடலுக்குள் சரியான முறையில் எடுத்துக் கொள்ளப்படும் உணவு எவ்வாறு உடலை வளர்த்தெடுக் கிறதோ, அதேபோல வேலையின் தன்மையும் மதிக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டால், உயரிய பயனைக் கொடுக்கும் என்று குமரப்பா விளக்குகிறார். மனிதனிடம் இருக்கும் விலங்குத்தன்மை அகன்று, உயரிய பண்புகளும் அதிகபட்ச உழைப்பின் பயன்களும் கிடைக்கும். பெரும் பாலான கருத்துகளைக் குமரப்பாவிடம் இருந்து எடுத்து, தன் நூல் முழுவதும் கையாளும் சூமேக்கர், அவரை தனது நூலின் ஒரே ஒரு இடத்தில் மட்டுமே குறிப்பிட்டுள்ளார். அதேநேரம், பல மேலை அறிஞர்கள் குமரப்பாவைப் பொருளியல் மெய்யியலாளர் என்றே குறிக்கின்றனர். அவருடைய பொருளியல் சிந்தனைகள் வன்முறையற்ற, நீடித்த வாழ்வுக்கு வழிகாட்டும் இயங்கியல் தன்மை கொண்டவை.

**எது சரி?**

குமரப்பாவின் காலத்தில் இரண்டு பெரும் பொருளியல் சிந்தனைப் பள்ளிகள் முட்டி மோதிக் கொண்டிருந்தன. கட்டற்ற பொருளியலை முன்வைத்த ‘முதலாளியம்’ ஒருபுறம். முதலாளித்துவத்தை அரசு கட்டுப்படுத்தி, ஓரிடத்தில் குவியும் முதலீட்டைப் பகிர்ந்து கொடுத்துச் சமத்துவத்தை உறுதி செய்ய வேண்டும் என்று பேசிய பொதுவுடைமை

மற்றொருபுறம். ஆனால், இந்த இரண்டு கோட்பாடுகளும் பொருள் உற்பத்தி முறை பற்றி பெரிதும் கவலை கொள்ளவில்லை. அறிவியல் தொழில்நுட்ப முன்னேற்றம் மூலம் பெருகும் பொருள் உற்பத்தி, அனைத்துச் சிக்கல்களுக்கும் தீர்வை தந்துவிடும் என்று கருதப்பட்டது. அது மட்டுமல்லாமல் பொருள் உற்பத்தியில் 'முதலீடு + மூலப் பொருள் + உழைப்பு' ஆகிய மூன்று மட்டுமே கருத்தில் கொள்ளப்பட்டது. ஆனால், வரையறுக்கப்பட்ட இயற்கை வளங்களைப் பற்றி இரு கோட்பாடுகளும் கவலைப்படவில்லை. அத்துடன் பொருள் உற்பத்தி முறை (Mode of production) பற்றியும் இக்கோட்பாடுகள் கவலைப் படவில்லை. ஆனால், குமரப்பா அந்த இரண்டு கூறுகளையும் கணக்கில் கொண்டார். இயற்கை வளங்கள் தொடர்ந்து கிடைப்பது அரிது என்றும், பெருமளவு பொருள் உற்பத்தி செய்யும் முறை தவறு. நேர்மாறாகப் பெருமளவு மக்களால் பொருள் உற்பத்தி நடக்க வேண்டும் என்று கூறினார்.



ஜே.சி.குமரப்பா

**உண்மைப் பொதுவுடைமை**

முதலாளிய முறைப் பொருள் உற்பத்தியும் பொதுவுடமை முறைப் பொருள் உற்பத்தியும் ஒரு வகையாகவே உள்ளதாகக் குமரப்பா கருதினார். தனி முதலாளிகளின் கட்டுப்பாட்டில் பெருந்தொழில்கள் இயங்குவதைப்போலவே, பொதுவுடமை அரசிலும் மையப்படுத்தப்பட்ட கட்டுப்பாட்டில் பெருந்தொழில்கள் அமைந்துள்ளதைச் சுட்டிக் காட்டினார். குறிப்பாகச் சோவியத் நாட்டின் பொருளியல் முறையைத் திறனாய்வுக்கு உள்ளாக்கினார். அங்குச் சில கட்சித் தலைவர்களிடம் மட்டும் அதிகாரம் குவிவதைச் சுட்டிக்காட்டினார். அதன் விளைவாகவே

சோவியத் நாடு பின்னர் வீழ்ந்ததை அறிய முடிகிறது. 1950-களில் சீனாவுக்கும் சோவியத் ருசியாவுக்கும் குமரப்பா சென்று வந்தார். அது பற்றி தொடர் கட்டுரைகளை எழுதினார். அந்நாடுகளில் எழுந்து வரும் தற்சார்பு உணர்வுகளைப் பெருமையுடன் பதிவு செய்தார். சோவியத்தில் உள்ள பொதுவுடமையைத் தாண்டிய 'உண்மையான பொதுவுடமை' வர வேண்டும் என்று எழுதினார். இதனால் அவர் 'கம்யூனிஸ்ட்' என்றும் அழைக்கப்பட்டார். கட்டுரையாசிரியர், சூழலியல் எழுத்தாளர் மற்றும் இயற்கை வேளாண் வல்லுநர்| தொடர்புக்கு: adisilmail@gmail.com